நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 221/2021
அரசு தரப்புக்காக அ. சா. 3 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 4 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of July 2026.

**<u>முதல் விசாரணை</u>–** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 01.14 )

நான் தற்போது பரங்கிப்பேட்டையில் குடியிருக்கிறேன். நான் மீன் கம்பெனியில் லோடு எடுக்கும் வேலை செய்கிறேன். 17.04.2021 ஆம் தேதி நான் வேலைக்கு போய்விட்டு நானும் அப்துல்காதரும் 03.00 அல்லது 03.30 மணியளவில் HP சிலிண்டர் குடோன் அருகே வந்துகொண்டிருந்தபோது ஒரு பிறந்த குழந்தை வாய்க்காலில் இறந்துகிடந்ததை பார்த்தோம். அதன்பிறகு நாங்கள் பரங்கிப்பேட்டை மணியகாரிடம் சென்று நேரடியாக சொன்னோம். அவர் காவல்துறைக்கு தகவல் தெரிவித்தார். அந்த குழந்தையை மருத்துவமனைக்கு போலிசார்

எடுத்து போனார்கள். அதுவரையில் நான் அங்கு இருந்தேன். அதற்கு பிறகு வீட்டிற்கு சென்றுவிட்டேன். குழந்தை இறந்து கிடந்த இடத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள். வேறு எங்கும் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பகுதியாக ஆதரவு அளிக்காத நிலையில் ஏற்கனவே போலீசார் விசாரணையில் விசாரித்த போது கூறியிருப்பதை மறுத்துள்ள நிலையில் இந்த சாட்சியிடம் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154ன் கீழ் அனுமதி கோரினார். இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154–ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை–</u>

போலிசார் என்னை விசாரித்தபோது குழந்தையின் பிரேதத்தை கைப்பற்றி பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு ஆய்வாளர் அனுப்பி வைத்த பிறகு 18.04.2021 ஆம் தேதி ஆய்வாளர் என்னை வரவழைத்து பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் குழந்தையின் பிரேதத்தை பார்வையிட்டு காலை 06.00 மணி முதல் 08.00 மணி வரை பிரேத விசாரணை செய்தபோது நானும் உடன் இருந்ததாகவும் பெண் குழந்தையின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக அபிப்பிராயம் தெரிவித்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கிராம நிர்வாக அலுவலரிடம் தகவல் சொல்ல போனபோது யார் இருந்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர் இருந்தார். கிராம நிர்வாக அலுவலர் ஆணா பெண்ணா என்றால் ஆண் நபர். இதற்கு முன்பு நான் கிராம நிர்வாக அலுவலரிடம் சென்றுள்ளேனா என்றால்

சென்றுள்ளேன். அந்த கிராம நிர்வாக அலுவலரை எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த தகவலை நானும் அப்துல்காதரும் அவரிடம் தான் சொன்னோம் என்றால் சரிதான். நான் முதலில் 03.30 மணிக்கு குழந்தையின் பிரேதத்தை பார்த்தபோது வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலத்திற்கு பக்கத்தில் காவல் நிலையம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டபடி பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 01.24)

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.